**தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 19 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்ட வரைஞர் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்களிற்கான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் கீழ் வழங்கப்பட்ட மாதிரிக்கமைய நட்டங்களிற்கான பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | மீளாய்வாண்டில் ஏற்பட்ட 04 வாகன விபத்துக்கள் தொடர்பாக பூர்வாங்க அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விசாரணையின் பின்னர் நட்டம் | நிதிப்பிரமாணம் 104 பின்பற்றப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் முழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் மூலதனச் செலவினத்திலிருந்து சேமிக்கப்பட வேண்டுமென சுற்றறிக்கைகள் மூலம் தேவைப்படுத்தப்பட்டிருந்த 25 சதவீத தொகை மற்றும் திணைக்களத்திற்கு நேரடியாக அறிவிக்கப்பட்ட பின்னர் சேமிக்கப்பட்ட தொகைகள் தவிர 2 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 4 மீண்டெழும் செலவின விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,750,000 கூட்டுமொத்தமான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 3,607,216 தொகை மேலதிகமாக சேகரிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பானது 26 சதவீதத்திற்கும் 100 சதவீததத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் சரியாகவும் யதார்த்தமானதாகவும் தயாரிக்கப்பட வேண்டும். | 2019.06.17 ஆம் திகதிய 04/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் மீண்டெழும் செலவினங்கள் குறைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.<br>2019.09.24 ஆம் திகதிய 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br>சட்ட புத்தகங்களை அணுகுவதற்கு Westlaw data base பயன்படுத்தப்பட்டிருந்ததால் புத்தகங்களை வாங்குவதற்கான தேவை காணப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 185 மில்லியன் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் சட்டமூலங்களை ஒன்றிணைத்து திருத்துவதற்கான செயற்திட்டம் 2014 யூலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதிகாரச்சட்டங்கள் தொழில்நுட்ப ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் வரைவதில் விசேட திறனுள்ள உத்தியோகத்தரால் செயற்திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட வேண்டியிருத்தல், அத்தகைய உத்தியோகத்தர் காணப்படாமை, அத்தகைய |

பட்டியலிடப்பட்டிருந்தது.
எனினும் செயற்திட்டம் பூர்த்தி செய்திருக்காத போதிலும் 2020 திசெம்பர் வரை காலநீடிப்பு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. 2014 தொடக்கம் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 6 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 11.687 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

உத்தியோகத்தர்களில் பெரும்பாண்மையினர் திணைக்களத்தின் சராசரி கடமைகளை மேற்கொள்ளும் சட்ட உத்தியோகத்தர்களாக காணப்படுகின்றமை, செயற்திட்டத்திற்கான திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக காலம் எடுத்தல், செயற்திட்டத்திற்கு பகுதிநேர அடிப்படையில் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டமை, உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுக்கு சென்றமை மற்றும் அவர்களது சேவைக்காலம் முடிவிற்கு வந்தமை போன்ற விடயங்கள் அனைத்தும் செயற்திட்டம் தாமதமடைவதற்கு ஏதுவான காரணங்களாகும். அத்துடன் செயற்திட்டத்திற்காக செயலாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் ஊழியர் ஒருவர் கொடுப்பனவின்றி நியமனம் செய்யப்பட வேண்டுமென 2019.04.08 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக என்னால் அறிவிக்கப்பட்ட நடைமுறையில் இல்லாத தீர்மானமொன்று நீதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.
செயற்திட்டத்தை தொடர்வதற்கான அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளதுடன் இரண்டு புதிய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யும் சாத்தியத்தன்மை கண்டறியப்பட வேண்டுமென செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பாக நீதியமைச்சின் செயலாளருடன் 2020.03.05 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாட்டின் அபிவிருத்திக்கு வினைத்திறனாகவும் திட்டமிடப்பட்ட வகையிலும் இலங்கை அரச துறையில் மத்தியப்படுத்தப்பட்ட மனித வளங்களைப் பயன்படுத்தும் தேவைப்பாட்டை வலியுறுத்தி 2018 சனவரி 24 ஆம் திகதிய அரச துறையிலுள்ள மனித வளங்களை மேம்படுத்துதல் எனும் பெயரினாலான 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அந் நோக்கத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்பட்டவாறு அரச துறையிலுள்ள மனித வளங்களின் அபிவிருத்தி தொடர்பாக 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிறைவடைந்ததும் சமர்ப்பிக்கப்படும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சட்டங்களை வரைவதில் நேரடியாக ஈடுபட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 47 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலையிலுள்ள 8 பதவிகளுக்குரிய 33 உத்தியோகத்தர்களிற்கு 2019 சனவரி 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடம் காணப்பட்டது. மேலதிக சட்ட வரைஞர் மற்றும் பிரதி சட்ட வரைஞர் ஆகிய பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் பதிற்கடமை அடிப்படையில் 2020 யூலை அளவில் நிரப்பப்பட்டிருந்தன. மேலும் ஆரம்ப மற்றும் இரண்டாம் | அத்தியாவசிய பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | **மேலதிக சட்ட வரைஞர் மற்றும் பிரதி சட்ட வரைஞர்**<br>• முழுநேர அடிப்படையிலான பதிற்கடமை இயலளவொன்றில் இப்பதவிக்கு தகைமைகளை பெற்றிருந்த பிரதி சட்ட வரைஞரை நியமனம் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 03/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியுயர்வு ஒன்றினூடாக வெற்றிடத்தை நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

நிலைகளில் உள்ள 5 பதவிகளில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டன.

**சிரேஷ்ட உதவி சட்ட வரைஞர்**

---------------------------------------------

- உதவி சட்டவரைஞர் பதவியிலுள்ள சேவைக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பதவி வழங்கப்படுகின்றது. தற்போது பதவி உயர்த்தப்படுவதற்கு போதுமான சேவைக்காலத்துடன் (10 ஆண்டுகள்) திணைக்களத்தில் எந்தவொரு உத்தியோகத்தரும் காணப்படவில்லை.

**உதவி சட்ட வரைஞர்**

----------------------------------

- இப்பதவிக்கான ஆட்சேர்ப்புத்திட்டம் திருத்தப்பட்டு அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**மொழி பெயர்ப்பாளர்**

--------------------------------

- இப்பதவிக்கான ஆட்சேர்ப்புத்திட்டம் திருத்தப்பட வேண்டியதுடன் மீளாய்வானது செயன்முறையில் உள்ளது.

உதவிப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், அபிவிருத்தி உதவியாளர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், ஆவண உதவியாளர், பதிப்பாளர் மற்றும் சாரதி பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.